# மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்
# ஆத்தூர்
------
## அசல் வழக்கு எண்.8/2019

**2025 ஆம்** வருடம் அக்டோபர் மாதம் 28 ஆம் நாள் வாதி தரப்பு சாட்சியான வா.சா.2-இன் வாக்குமூலம் 1873 ம் வருடத்திய 10 வது விதியின் படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஞானசேகரன் | ஜாதி | : | |
| த.பெ | : | சௌந்திரபாண்டி | தொழில் | : | விவசாயம் |
| கிராமம் | : | அய்யம்பாளையம் | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 57/2025 |
| தேதி | : | 28.10.2025 | | | |

பிரதிவாதி தரப்பு குறுக்கு **விசாரணை**

அய்யம்பாளையம் நகர்ப்புறத்தில் தான் நீங்கள் குடியிருந்து வருகிறீர்கள் என்றால் சரிதான். வழக்குச் சொத்திற்கும், உங்கள் வீட்டிற்கும் 3 கிலோ மீட்டர் இருக்கும் என்றால் இல்லை 1.5 கிலோ மீட்டர் தான் இருக்கும். நீங்கள் என்ன தொழில் செய்கிறீர்கள் என்றால் விவசாயம் மட்டும் செய்கிறேன். நீதிமன்றத்தில் இருந்து உங்களுக்கு அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. வாதிகள் சொன்னதன் பேரில் தான் நீதிமன்றத்திற்கு சாட்சயம் அளிக்க வந்துள்ளீர்கள் என்றால் சரிதான். வாதிகளை உங்களுக்கு எத்தனை வருடமாக தெரியும் என்றால் 40 வருடமாக தெரியும். வாதி உங்களுக்கு உறவினரா என்றால் உறவினர் தான்.

நிருபண வாக்குமூலத்தில் வழக்கு விபரத்தை உங்களுக்கு தெரியும் என்று கூறியுள்ளீர்கள், அந்த விபரத்தை உங்களுக்கு யார் சொன்னது என்றால் எனக்கு தெரியும். வழக்குச் சொத்திற்கு அருகில் உங்களுக்கு பாத்தியப்பட்ட சொத்து எதுவும் இல்லை என்றால் சரிதான். உங்களுடைய வீட்டிலிருந்து உங்களுடைய சொத்து இருக்கும் இடத்திற்கு செல்வதற்கு வழக்கு சொத்து வழியாக செல்ல வேண்டிய அவசியமில்லை என்றால் சரிதான். வாதிகள் சரவணனுக்கு எழுதிக்கொடுத்த பத்திரத்தை நீங்கள் நேரடியாக பார்த்துள்ளீர்கள் என்றால் இல்லை. வழக்குச் சொத்து நுழைவாயிலில் சரவணன் எந்த வருடம் கேட் அமைத்தார் என்று உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியாது.

வழக்கு சொத்தில் 80 தென்னை மரங்கள் இருக்குமா என்றால் அது பற்றி எனக்கு ஞாபகமில்லை, வழக்கு சொத்தில் தென்னை மரங்கள் உள்ளதா இல்லையா என்று எனக்கு

தெரியாது. வழக்கு சொத்திற்கு நீதிமன்ற ஆணையர் வரும்போது நீங்கள் அந்த இடத்தில் இருந்தீர்களா என்றால் இல்லை. பிரதிவாதிகள் வாதியின் சுவாதீனத்தை இடைஞ்சல் செய்வதாக சொல்வது எந்த தேதியில் என்றால் 4 வருடங்களுக்கு முன்பாக இருக்கும், இது சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்து பேச்சுவாத்தை நடந்தது. நீங்கள் நிருபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சர்வே எண்கள் சரிதானா என்றால் எனக்கு ஞாபகமில்லை.

வழக்கு சொத்தையும், வழக்கு விபரங்கள் பற்றியும் உங்களுக்கு தெரியாது என்றும் வாதிகள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய்சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

**Sd/-Thiru. S. Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor